## இந்த இடம் முழுவதும் சீர்படுத்தப்பட வேண்டும் —மாநகர மன்றத்திற்கு ஆணை

# ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மக்களோடு மக்களாக அன்வார்!




★ நேற்று மஸ்ஜிட் இந்தியா வட்டாரத்தை பிரதமர் அன்வார் சுற்றி பார்க்கிறார். அருகில் கெமிமா ஆலோசகர் முகமட் காதிர் அலி

(ஆர்.குணா)

கோலாலம்பூர், ஜன. 11-

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெவ்வேறு பள்ளிவாசல்களில் தொழுகையில் கலந்து கொள்ளும் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் நேற்று மஸ்ஜிட் இந்தியா இந்திய முஸ்லிம் பள்ளி வாசலுக்கு வந்து மக்களோடு மக்களாக தொழுகையில் கலந்து கொண்டார். அவர் வந்த போது அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றது பள்ளி வாசல் நிர்வாகம். தொழுகைக்கு வந்த மக்கள் அவரோடு கைகுலுக்கி மகிழ்ந்தனர். பள்ளி வாசல் தலைமை இமாம் நஸ்ருல் ஹக் அப்துல் லத்திப் வெள்ளிக்கிழமை உரையை வழங்கினார்.


பக்கம் 13



முதல் பக்கத் தொடர்ச்சி


## ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில்...

### மஸ்ஜிட் இந்தியாவை சுற்றிப் பார்த்தார்

தொழுகை முடிந்த கையோடு அங்குள்ள கடைகளையும் அங்காடி கடைகளையும் பிரதமர் அன்வார் சுற்றிப்பார்த்தார்.

வணிகர்களும் மஸ்ஜிட் இந்தியாவில் குழுமி இருந்த மக்களும் பிரதமரை பார்த்து மகிழ்ந்தனர். பலர் அவரோடு கைகுலுக்க முயன்றனர். அங்கு செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் அன்வார் மாநகர் மன்றத்திற்கு முக்கிய கோரிக்கை ஒன்றையும் விடுத்தார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியா வட்டாரத்தில் வாணிக தலங்களும் கடைகளும் மோசமான சூழ்நிலையில் இருப்பதை உணர்ந்து அந்த வட்டாரத்தின் மேம்பாட்டில் கவனம் செலுத்துமாறு கோலாலம்பூர் மாநகர மன்றத்திற்கு பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் வேண்டுகோள் விடுத்தார்.

### சீர்படுத்த உத்தரவு

அங்குள்ள வரிசை கடைகள், அங்காடி கடைகள் அனைத்தும் மிக நீண்டகாலமாக இருக்கின்றன. மேலும் நாட்டுக்கு வரும் சுற்றுப்பயணிகளின் மையப்பகுதியாகவும் அது இருந்து வருகிறது.

பல இடங்களில் உள்ள கடைகள் மிக மோசமாக இருக்கின்றன. எனவே மாநகர மன்றம் இந்த வட்டாரத்தை சீரமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏராளமான மக்களை கவர்ந்திழுக்கும் இந்த இடம் சரிப்படுத்தப்பட வேண்டும். அங்கு வரும் மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அங்காடி கடைகள், சிறுசிறு வணிகங்கள் நடைபெறும் இடங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று நேற்று சுமார் 15 நிமிடங்கள் வரை அந்த வட்டாரத்தை பார்வையிட்ட பின்னர் அவர் பேசினார். முன்னதாக தொழுகையில் சுமார் 5,000 பேர் வரை கலந்து கொண்டனர்.